بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# *Friday Sermon*/வெள்ளிக்கிழமை குத்துஃபா 10/03/2017

**(10 Jamad'ul Aakhir 1438 Hijira)**

# *"Be God-Fearing"*

## "இறைவனுக்கு அஞ்சிக் கொள்பவர்களாகயிருங்கள்"



### Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹீதும் தஅவசும் சூராஃஅல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

இறைவனுக்கு மட்டுமே புகழ். மேலும் நான் இறைவனுக்கு மட்டும் புகழர்ப்பிக்கின்றேன். மௌரிஷியஸ் அதன் 49-ம் வருட சுதந்திரதினம் கொண்டாடுகின்றது(1968-2017). தேசிய அளவில் நம் ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாம் அதிகார பூர்வமாக ரஜீஸ்டர் செய்து இப்போது 9 வருடம்

கடந்திருக்கின்றது. மட்டுமல்ல இரண்டு நாட்கள் மீதியுள்ளது. அதாவது மார்ச் மாதம் 12-ம் தேதி ஒன்பது ஆண்டு நிறைவடையும். இந்த ஆன்மீக புரட்சியின் காற்று வீசியடிக்க துவங்கி 9 வருடம் (அதற்கும் மேலாகலாம் அதாவது 2000 இறுதி முதல்) கடந்திருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் மேலும் மேலும் நமக்கு சாதகமாக விஷயங்கள்(சோதனைகள்) நிகழ்ந்து வருகின்றன. அது மிக சிறந்த அளவில் நம்மீது, நம் ஜமா அத்தின் மீது, அல்லாஹ் நமக்காக எழுப்பிய ஜமா அத்தின் மீது (அந்த அருள்கள்) நிறைந்திருக்கின்றது. அது வழியாக உலகெங்கும் அவன் செயல்களை பரவச்செய்வதற்கு! அல்ஹம்துலில்லாஹ்! சும்ம அல்ஹம்துலில்லாஹ்! தனிப்பட்ட முறையில் என் மீதும் அதைப் போன்று நம்மீதும் அல்லாஹ் பொழிந்த நிகரற்ற அருள்களுக்காக நாம் முதலில் அல்லாஹ்வுக்கு நன்றியை செலுத்துவோம். காரணம் அல்லாஹ்வின் திட்டத்தில் மிக முக்கியம் வாய்ந்த பங்கு உங்களில் ஒவ்வொருவருக்கும் செய்வதற்குண்டு. அதற்காக நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மிக பெரிய தியாகங்களுக்கு ஆளாகிக் கொள்ள வேண்டியதாகயிருக்கும். அப்போது மட்டுமே அல்லாஹ்வின் விதியினைக் குறித்து நமக்கு உணர்ந்துக் கொள்வதற்கும் அதைப் போன்றே அல்லாஹ் நமக்கு வாக்குறுதி அளித்திருக்கும் வெற்றியினை தரிசித்துக் கொள்வதற்கும் முடிந்து விடுவது.

அல்லாஹ்வின் அருள்களால் நாள்களும் வருடங்களும் கடந்து செல்கின்றது. அல்லாஹ்வின் மாபெரும் அருள்களால், இந்த வெற்றியை நாம் அடைவதற்காக அவன் எவ்வகையில் வழிவகுத்திருக்கின்றான் என்பதற்கு நாம் சாட்சிகளாகயிருக்கின்றோம். அது என்னவாகயிருந்தாலும் சரி, இறைவனின் விருப்பத்திற்கே நாம் கீழ்படிந்திட வேண்டும் அத்தோடு நம் செயல்கள் வழியாக நாம் அவனை மகிழச்செய்ய வேண்டும். ஏதேனும் ஒரு காரியத்தை அடைய சாதாரணமாக மிக கடினமென நாம் எண்ணினாலும், லட்சியத்தன்மை ஒன்று மட்டுமிருந்தால் அதை சுலபமாக அடையமுடியும். அந்த லட்சியத்தன்மை என்பது நம் விருப்பத்தில் உட்பட்டிருக்கின்றது.(அடைய வேண்டும் என்ற விருப்பம் எவர் ஒருவரிடம் உள்ளது) ஆனால் இவ்வகை லட்சியத்தன்மை ஒருவரிடம் இல்லையென்றால் ஒரு எளிதான காரியம் கூட அவருக்கு மிக கடினமாகயிருக்கும். தீனுக்காக சில காரியங்கள் நமக்கு ஏன் செய்யயியலவில்லை? இந்த தற்காலிகமான உலகத்திற்காக எந்த அளவிலான தியாகங்களும் செய்வதற்கு நாம் தயாராகின்றோம். அதற்காக நாம் நேரமே எழும்பிக் கொள்கின்றோம். நாம் மகிழ்ச்சியுடன் ரொம்பதூரம் நடந்து செல்கின்றோம். பேருந்துக்காக காத்திருந்து அதில் நுழைந்து வேலை செய்யும் இடத்தை அடைகின்றோம். ஆனால் துரதிர்ஷ்டத்தால் பள்ளி வாசல் மிக அருகாமையில் இருந்தால்கூட அங்கு செல்வது மிக மிக கடினமென எண்ணிக்கொள்கின்றனர். இந்த இரண்டு விஷயத்தைப்பற்றி நாம் ஆராய்ந்து கொண்டால் வேலை செய்யும் இடத்திற்கு செல்வதை விட மிக சுலபமாகும் பள்ளியில் செல்வது என உணரயியலும். ஆனால் வேலை செய்யும் இடத்திற்கு

சென்று மிக கடினமான வேலையைக்கூட நாம் செய்கின்றோம். காரணம் அதில் பௌதீகமான ஒரு லாபம் இருக்கின்றது. பள்ளி வாசலில் வருவது மிக சுலபமான காரியமாகயிருந்தாலும் அங்கு செல்வதில்லை காரணம் அதன் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் உணரவில்லை என்பது தான்.

ஒரு நபி மொழியில் காணலாம் தூய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“பள்ளி வாசலில் சென்று இஷா பஜ்ஜர் தொழுகையினை நிறைவேற்றுவதன் பலன் என்னவெல்லாமென்று கபட நம்பிக்கையாளர்கள்(நயவஞ்சகர்கள்) உணர்ந்திருந்தால் நிச்சயமாகவும் அவர்கள் பள்ளி வாசலில் இழைந்து சென்றாவது தொழுகையினை நிறைவேற்றியிருப்பார்கள்”**

எல்லாம் வல்ல இறைவனிடத்தில் அன்பை வளரச் செய்வதே அதற்கான பரிகாரம். அவ்வாறேயானால் தீன் விஷயங்களின் பால் நமக்கு விருப்பம் உருவாகுவதோடு, மறுமையை பற்றிய சிந்தனைகள் நம்மிடம் வளரவும் மத நடைமுறைகளை கடைப்பிடித்துக் கொள்வதற்கான ஆசை நம்மிடம் முளைத்துக் கொள்ளவும் செய்யும்.

அதற்கு பிறகு தீனில் கடினமானதோ, பரிகாசமானதோ, இயற்கைக்கு மாறானதோ ஆன எதுவும் நமக்கு கண்டுகொள்ளயியலாது. மட்டுமின்றி உண்மையில், நம் அன்பாளனாகிய எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு சுட்டிக்காட்டியதும், அவன் புகழ்ந்ததுமான நேர்மையான வாழ்க்கை வழி இதுவேயென நம்மால் உணர்ந்துக் கொள்ளமுடியும். உன்னதனாகிய அல்லாஹ்விடமான அன்பு அதைப்போன்றே முன்னேற்றம், வளர்ச்சி இவையாவும் திடீரென ஒரு நாள் வந்தடைவதல்ல. இது கிடைப்பதற்காக நாம் முயற்சிக்க வேண்டும் “தீனை செயல்வடிவில் கொண்டு வருவதற்காக அர்ப்பண நோக்கத்துடன் கடினமான முயற்சிகளில் ஈடுபட்டால் மட்டுமே நமக்கு வெற்றியடைய முடியும். இறையெண்ணம் நம் உள்ளத்தில் புகுந்திட நாம் கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அது தவிர்த்துக் கொள்ளயியலாத ஒன்றாகும். அதற்காக தஸ்பீஹுகளும் (இறைவனின் தூய்மையை புகழ்தல்) தறூத் சரீபுகளும் (நபியின் மீது சலவாத் செல்தல்) இஸ்திஹ்பாறுகளும் (அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பை தேடுதல்) செய்ய வேண்டும். இவ்விஷயங்களில் அனுதினம் நாம் ஈடுபட்டுக் கொள்ள வேண்டும். அது கட்டாயமான விஷயமென்று புரிந்து, செயல்பட வேண்டும். அதை போன்றே ஒரு குறிப்பான நேரம் குர் ஆன் ஓதிக்கொள்வதற்காக கண்டு கொள்ள வேண்டும். தியாகங்களும் செய்ய வேண்டும். இவ்வகையான நிலையை அடைவதற்காக நாம் செய்யவேண்டிய ஒரு விஷயம் அதாவது அதற்கு சரியான ஒரு வழி என்பது தீனின்பால் மூழ்கியிருக்கின்ற, அதனை பின்பற்றுகின்ற நற்குணமுடைய

நபர்களை அப்போதப்போதாக சந்தித்து கொள்ள வேண்டும். அதை நடைமுறையாக்கி கொள்ளவும் நிரந்தரம் அவர்களுடன் தொடர்பு வைத்து கொள்ளவும் வேண்டும். அல்லாஹ்வுடன் பந்தமில்லாதவர்களை நிரந்தரமாக சந்திக்கக் கூடாது. அவர்கள் மண்ணுலக வாழ்க்கையின் மீதான, தகுதியற்ற சுக நுகர்ச்சிகளுடன் தொடர்புடையவர்களாவார்கள். அவர்களின் ஒரு கால் கபறின் பாலும் மற்றொருகால் பூமியின்பாலும் வைத்த மாறு, என்றென்றும் இவ்வுலகில் வாழ்ந்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில், பௌதீகத்தின் பால் இணைந்திருப்பதோடு இவ்வுலக தேவைகான பொருள் கூட்டங்களை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். நாளை தங்களின் மரண மணி முழங்குமென்று நன்கு அவர்கள் உணர்ந்திருந்தும் (பௌதீக செயல்களில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்). அவர்கள் தங்களின் கரங்களிலிருப்பதையனைத்தும் நாளை தூக்கி வீசவேண்டியதாகயிருக்கும். மரணமடைகின்ற மனிதன் எதையும் கொண்டு செல்வதில்லை என்றும் அவனது அனைத்து பொருள் கூட்டங்களையும் இங்கு தவிர்த்துக் கொண்டே செல்ல வேண்டும் என்றும் அவர் கொண்டு செல்வது அவரின் நற்செயல்கள் மட்டும்தான் என்றும் அவர்கள் புரிந்துக் கொள்ளவில்லையா?

இவ்வகை மனிதர்கள் அவர்களின் மரணத்தைக் குறித்து சிந்திப்பதில்லை. ஒரு நாள் மரணம் அவர்களை அர்ப்புதப்படுத்திக் கொள்ளும். மரணத்திற்குப்பின் அவர்களுக்கு என்ன நிகழும் என்பதைக்குறித்து அவர்கள் சிந்திப்பவர்களல்ல. அவர்கள் தங்களைப் போன்றே பிறமக்களை துன்புறுத்திக் கொள்கின்றனர். இவ்வுலகின் பொருள்களை மேலும் அதிகரித்துக் கொள்வதற்காக எல்லாவித மோசமான செயல்களிலும் ஈடுபட்டிருக்கின்றனர். அவ்வாறு இவ்வகை பொருள்களை அதிகரித்துக் கொள்வதில் வெற்றியடைந்த அவர்கள் தங்களின் கடுமையானயியல்பை (அதுவாயிலாக) வெளிப்படுத்திக் கொள்கின்றனர். முற்றிலும் ஏழைகளாகயிருப்போர்களை அவர்கள் வெறுப்புடன் பார்க்கின்றனர். அவர்கள் சம்பாதித்ததெல்லாம் அல்லாஹ்வே அவர்களுக்காக வழங்கி கொண்டதென்று அவர்கள் உணருவதில்லை. நிச்சயமாக அதில் ஏதொன்றும் உண்மையில் அவர்களுடையதல்ல. காரணம்(ஒரு நாள்) அவையனைத்தும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பால் திரும்பி சென்று விடும். பூமியில் அவர்களின் வாழ்க்கை முழுவதும் ஒரு பாழ் வேலையாக பரிணமித்து விடும். காரணம் தங்களின் ஆன்மீக உணவுக்காக எதுவும் அவர்கள் சேர்த்து வைக்கவில்லை.

ஆகவே ஒரு நம்பிக்கையாளரைப் பொறுத்தவரையில் தன்னை படைத்தவனுக்கு திருப்தி அளிக்குமாறு ஏராளம் முயற்சிகள் செய்ய வேண்டும். தன் பலவீனங்களுக்காக மன்னிப்பை தேடிக் கொள்ள வேண்டும். பாவங்களிலிருந்துள்ள மீட்சிக்காக மன்றாடிக் கொள்ள வேண்டும். தவறு குற்றங்களிலிருந்து விடுதலையைப் பெற்று விடுதற்காக யாசித்துக் கொள்ள வேண்டும். ஆகவே நான் உங்களுக்கு கூறும் உபதேசம், நீங்கள்

நற்குணமுடையவர்களிடம் சேர்ந்து செயல்படுங்கள் என்பதாகும். எல்லாம் வல்ல இறைவனின் அன்பை நம்பால் வரவழைத்துக் கொள்வதற்கு மிக சிறந்த சுலபமான வழி இது மட்டுமாகும். சிலகாலங்களுக்கு பிறகு இந்த தன்மை நம் வாழ்க்கையின் ஒரு பகுதியாக அமைந்து விடும். காரணம் "தீனை" பின்பற்றாமலிருந்தால் நமக்கு எவ்வித சுகமும் கிடைப்பதில்லை என்ற நிலையில் நாம் எட்டிவிடுவோம். அந்நிலையினை நாம் அடைந்துவிடும் பொழுது நமக்கு சுயமாகவே கூறிக் கொள்ளயியலும் எல்லாம் வல்ல அல்லாஹுவுடன் நம் இதயம் பந்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என.

உங்களின் தற்போதைய பந்தங்களை குறித்து நீங்கள் சுயமாக ஒரு ஆய்வுசெய்திடுங்கள். உங்களின் நட்பு, உங்கள் பந்தங்கள், நீங்கள் நிரந்தரமாக சந்திக்க விரும்புகின்றோர்கள் அவர்களைப் பற்றியும் நீங்கள் சிந்தித்துக் கொள்ளுங்கள். அத்தோடு உங்களின் பிள்ளைகளின் செயல்களைக் குறித்தும் யோசித்துக் கொள்ளுங்கள். இவையாவும் நீங்கள் நன்கு கவனம் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான காரியங்களாகும். அவ்வாறு செய்யாமலிருந்தால் நீங்கள் அப்போதப்போது "பாஸீக்" ஆக பரிணமிப்பீர்கள். "பாஸீக்" என்றால் மிக பெரிய பாவம் செய்கின்றவன் என பொருள்.

இதை போன்றே சிறிய அளவில் தவறுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்போர்களும் ஒரு "பாஸிக்" காக மாறிவிடுவார்கள். ஒருவர் ஒரு பாவம் செய்யும் பொழுது அவர் சுயமாகவே தம் மீது கரிதேய்த்துக் காட்டிக்கொள்பவர் ஆவார். அவ்வாறு அவர் விலையற்றவராக பரிணமிப்பார். அவர் சுயமாகவே தன்னை வெட்கமற்றவன் என வெளிப்படுத்திக் கொள்கின்றார். ஒரு கவலையான விஷயத்தை பாருங்கள், அதாவது பொது மக்களின் முன் மிக கண்ணியமான ஆள்கள் உண்டு ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நோக்கத்தில் அவ்வகையாள்களுக்கு எவ்வித கண்ணியும் இல்லை என்பதே உண்மை.

உண்மையான கண்ணியம் என்பது அல்லாஹ்வின் பார்வையிலான கண்ணியமாகும். நிச்சயமாக அதுவே என்றென்றும் நிலைத்திருக்கும் உண்மையான கண்ணியம். அது நேர்மையான ஒரு கண்ணியமாகவேயிருக்கும். ஆகவே வெற்றியடைந்தோர்கள் என கூறி மக்கள் தங்களின் தோள்களில் உட்காரவைத்திருப்போர்கள் உண்மையில் கண்ணியமானவர்களாகயிருப்பார்கள் எனயில்லை. சரியான கண்ணியமுடையவர் ஒரு "முத்தகி"யாக யிருப்பார். (அல்லாஹ்வை அஞ்சி நடப்போரும், நற்குணமுடையவரும்) அல்லது களங்கமற்றவர், தீனின் பால் பற்றுள்ளவர். தீனின் மீது நல்ல பற்றுள்ளவர் என்றால் தன்னை படைத்தவனிடமான கடமைகளை நிறைவேற்றிக் கொள்பவர். தூயதூதர் முகம்மது (ஸல்) அவர்கள் கற்பித்த தத்துவங்களுக்கு ஏற்றவாறு ஒருவர் இவ்வுலகில் தன் உழைப்பு வழியாக சேர்க்கும் அனைத்து காரியங்களும்(பொருள்களும்) ஒரு "முத்தகி"யாக அவர் இருக்கும் வாயிலாக மிக நல்ல வகையில் அவற்றை சேர்த்துக்கொள்ள முடியும் என்பதே உண்மை.

அல்லாஹ் அவனு “தீனை” பின்பற்றுகின்றோர்களுக்கு மிக சந்தோஷகரமான ஒரு வாழ்க்கையை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கின்றான். அவரின் அனைத்து பிரச்சனைகளையும் அல்லாஹ்வே பரிகரித்துக் கொள்வான் என்றும் உறுதியளித்திருக்கின்றான். அவர் எதிர்பார்க்காத வழி மூலமாக அவருக்கு தேவையானதை அனைத்தும் வழங்கிகொள்வான். அல்லாஹ்வினால் முடியாததோ அல்லது அவனுக்கு கடினமானதோ ஆன எதுவுமில்லை. கடினமானதான எதுவும் மிக சுலபமாக்கிக் கொள்வதற்கான ஆற்றல் அவனுக்குண்டு. முடியாத விஷயத்தை முடித்துக் கொள்வதற்கான திறமை அவனுக்குண்டு. சாதகமல்லாத விஷயங்களை சாதகமாக்கி பரிணமிக்க செய்யும் சக்தி அவனுக்குண்டு. நமக்கு தேவையானதனைத்தும் அவன் கரங்களிலுண்டு. அவன் எல்லாம் வல்லவன் ஆவான். இதனைத்தும் அடைவதற்கு ஒரேயொரு வழி மட்டுமேயிருக்கின்றது. அவ்வழி என்னவென்றால் நாம் “முத்தகி” யாக வேண்டும் என்பது தான். அதற்கு பின் எல்லாம் சரியாகிவிடும்.

அனைத்தையும் கட்டுபடுத்திக் கொள்பவனாகிய அல்லாஹ்வின் மகத்துவத்தை புகழ்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக எல்லா காரியங்களும் அவனது கரங்களிலாகும். யா அல்லாஹ்! உனக்காக அனைத்தும் அர்பித்துக் கொள்வதன் வாயிலாகவும் உன்னை அனுசரித்து கொள்வதன் வாயிலாகவும் நீ எங்களை கண்ணியமிக்கவராக பரிணமிக்கச் செய்வாயாக. உன் அதிருப்திக்கு எங்களை ஆளாக்கி கொள்ளாமல் இருப்பாயாக! ஆமீன்.

**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**

AZIM AHMAD
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817